தமிழ் ஊடகங்களின் தோற்றமும் பெண்களின் பங்களிப்பும் ஒரு வரலாற்று பார்வை

பிரான்சிஸ் ஆண்டனி சே

முதுகலைத்தமிழ் இரண்டாம் ஆண்டு

தூய வளனார் கல்லூரி

திருச்சிராப்பள்ளி

ஆய்வுச் சுருக்கம்

19-ஆம் நூற்றாண்டின்இறுதிப் பகுதியில் அச்சுத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி தமிழ்ச்சமூகத்தில் புதிய அறிவியல், சமூக மற்றும் பண்பாட்டுமாற்றங்களை உருவாக்கியது. அச்சு ஊடகங்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கும் சமூகச்சீர்திருத்தத்திற்கும் முக்கியமான தளமாகவிளங்கின. இருப்பினும், தொடக்ககால ஊடகவரலாற்றில் பெண்களின் பங்களிப்பு போதிய அளவில் பதிவு செய்யப்படவில்லை. ஆரம்பகாலஇதழ்களில் பெண்கள் பெரும்பாலும் சமூகச் சீர்திருத்த விவாதங்களின் பொருளாகவே சித்தரிக்கப்பட்டனர். பின்னாளில் பெண்களுக்கென தனித்த இதழ்கள் தோன்றியதன் மூலம் அவர்கள் எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், சமூகச்சிந்தனையாளர்கள் என்ற நிலைக்கு முன்னேறினர். இவ்வாய்வு, தமிழ் ஊடகவரலாற்றில் பெண்களின் பங்களிப்பை வரலாற்று நோக்கிலும் பெண்ணியக்கோட்பாட்டு நோக்கிலும் ஆராய்கிறது. மேலும், பெண்களின் ஊடகச் செயல்பாடுகள் சமூக மாற்றத்திற்கு எவ்வாறு பங்களித்தன என்பதையும் விளக்குகிறது.

Abstract

In the late 19th century, the development of printing technology brought about new scientific, social, and cultural changes in Tamil society. Print media emerged as a significant platform for the exchange of ideas and for social reform. However, the contributions of women in early media history have not been adequately documented. In the early journals, women were mostly portrayed as the subject of social reform debates. Later, with the emergence of exclusive journals for women, they advanced to become writers, editors, and social thinkers. This study examines the contributions of women in the history of Tamil media from both a historical perspective and a feminist theoretical perspective. It further explains how women's media activities contributed to social transformation.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

திறவுச்சொற்கள்

தமிழ் ஊடகம், பெண்கள், அச்சு இதழியல், பெண்ணியம், ஊடக வரலாறு, சமூகச் சீர்திருத்தம்.

முன்னுரை

ஊடகங்கள் ஒரு சமூகத்தின்சிந்தனைப்போக்கையும், அறிவு வளர்ச்சியையும், பண்பாட்டுமாற்றங்களையும் பிரதிபலிக்கும் முக்கியமான கருவிகளாகக்கருதப்படுகின்றன. ஒரு காலகட்டத்தின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டுநிலைகளை அறிந்து கொள்வதற்குஅக்காலத்தின்ஊடக வரலாறு முக்கியமான ஆதாரமாகஅமைகிறது. தமிழில் அச்சு ஊடகங்களின் தோற்றம் கல்வி, மொழி வளர்ச்சி மற்றும் சமூகச்சீர்திருத்தக்கருத்துக்களைப்பரப்புவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச்செய்தது.ஆயினும், தொடக்ககால தமிழ் ஊடகவரலாற்றில் பெண்களின் இடம் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டிருந்தது. பெண்களின் வாழ்க்கை, கல்வி, திருமண மரபுகள், கைம்பெண் மறுமணம், குழந்தைத் திருமணம் போன்றவை குறித்து ஆண் எழுத்தாளர்கள் அதிகம் எழுதியிருந்தாலும், பெண்களின் சொந்தக் குரல் மிகக் குறைவாகவே பதிவு செய்யப்பட்டது. இதற்குக் காரணமாக அக்காலசமுதாயத்தில்நிலவியஆணாதிக்கக்கட்டமைப்பும், பெண்களுக்கு கல்வி வாய்ப்புகள் மறுக்கப்பட்ட நிலையும் அமைந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்.பெண்களுக்கான கல்வி வளர்ச்சியடைந்ததுடன், பெண்களேஇதழ்களை நடத்தும் புதிய மரபும் உருவானது. இதன் மூலம் பெண்கள் வெறும் வாசகர்களாக அல்லாமல், கருத்துருவாக்கிகளாகவும் சமூக மாற்றத்தை முன்னெடுக்கும் ஆளுமைகளாகவும் உருவெடுத்தனர். இவ்வாய்வு, தமிழ் ஊடகவரலாற்றில் பெண்களின் இப்பரிணாமவளர்ச்சியை வரலாற்று ஆவணங்களின் அடிப்படையில் ஆராய்கிறது.

ஆய்வுச் சிக்கல்

தமிழ் இதழியல் வரலாறு குறித்த பல ஆய்வுகள்இதழ்களின் தோற்றம், ஆசிரியர்கள், அரசியல் தாக்கம் மற்றும் மொழி வளர்ச்சி ஆகியவற்றை மையமாகக்கொண்டுள்ளன. ஆனால், பெண்களின் பங்களிப்பைமையமாகக் கொண்ட ஆய்வுகள் மிகக் குறைவாகவேஉள்ளன.குறிப்பாக, பெண்கள் ஆசிரியர்களாக, எழுத்தாளர்களாக, இதழியல் முன்னோடிகளாகஆற்றிய பணிகள் முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லை.மேலும், பெண்களுக்கெனவெளிவந்தஇதழ்களின் சமூகப் பங்களிப்பு, அவற்றின் கருத்தியல் பின்னணி, பெண்ணியசிந்தனையின் வளர்ச்சியில்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

அவை ஏற்படுத்திய தாக்கம் போன்றவை தனித்த ஆய்வுக்குஉட்படுத்தப்பட வேண்டிய துறைகளாக உள்ளன. எனவே, தமிழ் ஊடகவரலாற்றில் பெண்களின் இடத்தை மறுஆய்வு செய்வது இன்றியமையாததாகும்.

ஆய்வின்நோக்கங்கள்

தமிழ் அச்சு ஊடகங்களின் தோற்ற வளர்ச்சியை விளக்குதல்.

தொடக்ககால தமிழ் ஊடகங்களில்பெண்களின் நிலையை ஆராய்தல்.பெண்களால் நடத்தப்பட்ட இதழ்களின்சமூகப் பங்களிப்பை மதிப்பீடு செய்தல்.பெண்ணியக்கோட்பாட்டின் அடிப்படையில் பெண்களின் ஊடகப்பங்களிப்பைப்பகுப்பாய்வு செய்தல் .சமகாலஊடகஆய்வுகளுக்கானவரலாற்றுப் பின்னணியை விளக்குதல்.

ஆய்வுமுறை

இவ்வாய்வுவரலாற்று ஆய்வு முறையை (Historical Method)அடிப்படையாகக் கொண்டது. ஆய்விற்குத் தேவையான தரவுகள் முதன்மை மற்றும் துணைநிலை ஆதாரங்களிலிருந்துசேகரிக்கப்பட்டுள்ளன. பழைய தமிழ் இதழ்கள், வரலாற்று நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், பெண்ணியக்கோட்பாட்டு நூல்கள் ஆகியவை இவ்வாய்வின் முதன்மை ஆதாரங்களாகப்பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், ஒப்பீட்டுஅணுகுமுறையின் மூலம் தொடக்ககால ஆண் மைய இதழ்களுக்கும்பெண்களால் நடத்தப்பட்ட இதழ்களுக்கும்இடையிலான கருத்தியல் வேறுபாடுகள்ஆராயப்பட்டுள்ளன. இதன் மூலம் பெண்களின் ஊடகப்பங்களிப்பின் தனித்துவம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழியல் சூழலும் பெண்களின் நிலையும்

தமிழ் அச்சு ஊடக வரலாறு ஐரோப்பியமறைப்பணியாளர்களின்அச்சகப்பணிகளின் வழியே வளர்ச்சியடைந்தது. பின்னர் இந்திய அறிஞர்கள், சமூகச்சீர்திருத்தவாதிகள் மற்றும் தேசிய இயக்கத் தலைவர்கள் இதழியலை சமூக மாற்றத்திற்கானகருவியாகப்பயன்படுத்தினர். பத்தொன்பதாம்நூற்றாண்டின் இறுதியில் வெளிவந்த தமிழ் இதழ்கள் கல்வி, சமயம், அரசியல், இலக்கியம் மற்றும் சமூகச் சீர்திருத்தம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு இயங்கின.அக்காலஇதழ்களில் பெண்கள் தொடர்பான செய்திகள் இடம்பெற்றிருந்தாலும், அவை பெரும்பாலும் ஆண் பார்வையில் எழுதப்பட்டிருந்தன. பெண்கல்வி, குழந்தைத் திருமணம், கைம்பெண் மறுமணம், குடும்ப ஒழுக்கம் போன்றவை விவாதிக்கப்பட்டன. ஆனால்,

இவ்விவாதங்களில் பெண்களின் அனுபவங்கள், உணர்வுகள் மற்றும் கருத்துகள் நேரடியாகப் பதிவு செய்யப்படவில்லை. இதனால் பெண்கள் ஊடகங்களில்பேசுபவர்களாக அல்லாமல், பேசப்படுபவர்களாகவேசித்தரிக்கப்பட்டனர். சமூகத்தின்ஆணாதிக்கச் சிந்தனை அக்காலஊடகமொழியிலும்பிரதிபலித்தது. பெண் ஒரு குடும்ப உறுப்பினராக மட்டுமே கருதப்பட்டார்; தனித்த சமூக ஆளுமையாகப்பார்க்கப்படவில்லை. இதன் விளைவாக, பெண்களின் அறிவாற்றல், சமூகப் பங்களிப்பு மற்றும் அரசியல் விழிப்புணர்வு ஊடகங்களில் போதிய அளவில் வெளிப்படவில்லை.

முடக்கப்பட்ட குழு கோட்பாடும் தமிழ் ஊடகச்சூழலும்

எட்வின்அர்டினர் மற்றும் ஷெர்லிஅர்டினர் ஆகியோர் முன்வைத்தமுடக்கப்பட்ட குழு கோட்பாடு (Muted Group Theory), அதிகாரம் மிக்க சமூகக்குழுக்கள்மொழியையும் தகவல் பரிமாற்றத்தையும்கட்டுப்படுத்துகின்றன என்ற கருத்தை வலியுறுத்துகிறது. அதிகாரம் இல்லாத சமூகக்குழுக்கள் தங்களுடைய அனுபவங்களை வெளிப்படுத்த ஆதிக்கக் குழுவின் மொழியையே பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக இக்கோட்பாடு விளக்குகிறது.

இந்தக்கோட்பாட்டை தமிழ் ஊடகவரலாற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தொடக்ககால இதழியல் உலகம் பெரும்பாலும் ஆண்களால்கட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்பதை அறிய முடிகிறது. இதனால் பெண்களின் வாழ்வியல் அனுபவங்கள், குடும்ப வன்முறைகள், கல்வி மறுப்பு, பொருளாதாரச் சவால்கள் போன்றவை முழுமையாக வெளிப்படவில்லை.பெண்கள் தங்களுடைய குரலை சமூகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய தேவை உருவானபோது, பெண்களுக்கென தனித்த இதழ்கள் தோன்றத்தொடங்கின. இதுவே பெண்களின் ஊடகச்சுயாட்சிக்கான தொடக்கமாகக் கருதப்படுகிறது

பெண்கள் இதழ்களின் எழுச்சி

பெண்களின் கல்வி வளர்ச்சியுடன், அவர்களுக்கென தனித்த இதழ்கள் உருவாகின. இவ்விதழ்கள் பெண்களின் குடும்ப வாழ்க்கையை மட்டும் பேசாமல், கல்வி, உடல்நலம், சமூக உரிமைகள், பொருளாதாரம்,அரசியல் விழிப்புணர்வு போன்ற பல்வேறு துறைகளில்கருத்துகளைமுன்வைத்தன.சுகுணபோதினி போன்ற இதழ்கள் பெண்களுக்கான கல்வி மற்றும் குடும்ப நிர்வாகத்தை எடுத்துரைத்தன. பின்னர் வெளிவந்தசக்ரவர்த்தினி போன்ற இதழ்கள் பெண்களின் சமூக உரிமைகள், தேசிய உணர்வு, அரசியல் விழிப்புணர்வு ஆகியவற்றை வலியுறுத்தின.இவ்விதழ்களின்

மூலம் பெண்கள் வாசகர்களாகமட்டுமன்றிஎழுத்தாளர்கள், ஆசிரியர்கள், கருத்துருவாக்கிகள் என்ற நிலைக்கு முன்னேறினர்.டாக்டர்முத்துலட்சுமிரெட்டி போன்ற சமூகச்சீர்திருத்தவாதிகள் பெண்களின் கல்வி, உடல்நலம் மற்றும் சமூக உரிமைகள் தொடர்பான கருத்துகளைஊடகங்கள்வழியாகப்பரப்பினர். இதன் மூலம் ஊடகம் பெண்களின் குரலுக்கு புதிய சமூக இடத்தை உருவாக்கியது.

பெண்களின் ஊடகப்பங்களிப்பின் சமூக முக்கியத்துவம்

பெண்களின் ஊடகப் பங்களிப்பு தமிழ் சமூகத்தில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியது. பெண் கல்வி, கைம்பெண் மறுமணம், குழந்தைத் திருமண ஒழிப்பு, பெண்களின் அரசியல் பங்கேற்பு, பொருளாதாரத்தற்சார்பு போன்ற கருத்துகள் சமூக விவாதங்களாகமாறின. இதழ்களில் பெண்கள் தொடர்ந்து எழுதிய கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் மற்றும் கருத்துரைகள்சமூகத்தில்பெண்களைப் பற்றிய பார்வையைமாற்றுவதற்கு உதவின. இதன் விளைவாக, பெண்கள் கல்வி பெறுவதற்கும் சமூக வாழ்வில் பங்கேற்பதற்கும் புதிய வாய்ப்புகள்உருவாகின

திராவிட இயக்க ஊடகங்களும்பெண்ணியச் சிந்தனையும்

இருபதாம்நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் வலுப்பெற்றன. அவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திராவிட இயக்கம் விளங்கியது. சமூக நீதியையும், சாதி ஒழிப்பையும், பெண்களின் விடுதலையையும்வலியுறுத்தியஇவ்வியக்கம், ஊடகங்களை சமூக மாற்றத்திற்கான சக்திவாய்ந்த கருவியாகப்பயன்படுத்தியது.ஈ. வெ. இராமசாமி தலைமையில் வெளிவந்த குடியரசு, விடுதலை, புரட்சி போன்ற இதழ்கள் பெண்களின் உரிமைகள் குறித்த விவாதங்களுக்கு முக்கியத்துவம் அளித்தன. பெண்களின் கல்வி, சொத்துரிமை, திருமணத் தேர்வு, கைம்பெண் மறுமணம், குழந்தைத் திருமண ஒழிப்பு போன்ற கருத்துகள் தொடர்ந்து இவ்விதழ்களில்இடம்பெற்றன. பெண்கள் சமூக முன்னேற்றத்தின்மையமாகக்கருதப்பட வேண்டும் என்ற சிந்தனையைஇவ்விதழ்கள்வலியுறுத்தின.திராவிட இயக்க ஊடகங்கள் பெண்களை குடும்பத்தின்எல்லைக்குள் மட்டுப்படுத்தாமல், சமூக மாற்றத்தின் செயற்பாட்டாளர்களாகப் பார்க்கும் புதிய பார்வையைஉருவாக்கின. இதன் விளைவாக பெண்களின் அரசியல் விழிப்புணர்வும், பொதுவாழ்வில்பங்கேற்பும் அதிகரித்தன.

ஆய்வின் விவாதம்

இவ்வாய்வு வெளிப்படுத்தும் முக்கியமான உண்மை என்னவெனில், தமிழ் ஊடகவரலாற்றில் பெண்களின் பங்களிப்பு ஒரு நாளில் உருவானதல்ல; அது

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

நீண்டகால சமூகப் போராட்டங்களின் விளைவாக உருவான வரலாற்றுப்பரிணாமமாகும்.தொடக்கத்தில் பெண்கள் ஊடகங்களில்விவாதப் பொருளாக மட்டுமே இருந்தனர். பின்னர் அவர்கள் தங்களுக்கானஇதழ்களை உருவாக்கி, தங்களது அனுபவங்களையும்சிந்தனைகளையும் பதிவு செய்யத்தொடங்கினர். இந்த மாற்றம் வெறும் ஊடகவளர்ச்சியை மட்டும் குறிக்கவில்லை; அது சமூகத்தில் பெண்களின் அதிகாரமயமாக்கலின்வெளிப்பாடாகவும்அமைந்தது.பெண்ணியக்கோட்பாடுகளின் அடிப்படையில் நோக்கும்போது, பெண்கள் தங்களது குரலைத் தாங்களே பதிவு செய்யத்தொடங்கியகாலகட்டமே தமிழ் ஊடகவரலாற்றில் முக்கியமான திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. இது ஊடகஜனநாயகத்தின்வளர்ச்சிக்கும்சமூகச்சமத்துவத்திற்கும்அடித்தளமாக அமைந்தது

இவ்வாய்வின் மூலம்பெறப்படும்முடிவுகள்

தமிழ் ஊடகவளர்ச்சியின்தொடக்ககட்டத்தில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருந்தது. பெண்களுக்கெனதொடங்கப்பட்ட இதழ்கள் பெண்களின் கல்வி, சமூக உரிமை மற்றும் விழிப்புணர்வு வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றின. பெண்ணியக்கோட்பாடுகள் தமிழ் ஊடகவரலாற்றைப் புதிய கோணத்தில் புரிந்துகொள்ள உதவுகின்றன .திராவிட இயக்க ஊடகங்கள் பெண்களின் சமூகப் பங்களிப்பைவலுப்படுத்தின. சமகாலடிஜிட்டல்ஊடகங்களில் பெண்களின் செயல்பாட்டைப் புரிந்துகொள்ள தொடக்ககாலஊடக வரலாறு வலுவான அடித்தளமாகஅமைகிறது.

முடிவுரை

தமிழ் ஊடகவரலாற்றின் வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க இடத்தைப்பெற்றுள்ளது. தொடக்கத்தில் சமூகத்தின்கட்டுப்பாடுகளால் ஒடுக்கப்பட்டிருந்த பெண்கள், கல்வி, சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் மற்றும் தனித்த இதழ்களின் தோற்றம் ஆகியவற்றின் மூலம் தங்களுக்கான ஊடகவெளியை உருவாக்கினர். இதன் விளைவாக, பெண்கள் வாசகர்களாக இருந்த நிலையிலிருந்து எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், சமூக விமர்சகர்கள் மற்றும் கருத்துருவாக்கிகளாகவளர்ந்தனர். இன்றையடிஜிட்டல்ஊடக உலகில் பெண்களின் செயல்பாட்டைப்புரிந்து கொள்வதற்கும், ஊடகங்களில் பாலினச்சமத்துவத்தை வலுப்படுத்துவதற்கும், தொடக்ககால தமிழ் ஊடகவரலாற்றைப்புரிந்து கொள்வது மிகவும் அவசியமானதாகும். எனவே, பெண்களின் ஊடகப்பங்களிப்பைமையமாகக்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

கொண்ட ஆவணப்படுத்தல், களஆய்வு மற்றும் ஒப்பீட்டுஆய்வுகள் எதிர்காலத்தில் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

சான்று நூற்பட்டியல்

[1] ஈ. வெ. இராமசாமி. (1942). பெண் ஏன் அடிமையானாள்? ஈரோடு.

[2] முத்துலட்சுமிரெட்டி. ஸ்த்ரீ தர்மம் இதழ் தொகுப்புகள்.

[3] ஜெகந்நாதன், கே. வி. (1982). தமிழ் இதழ்கள் வரலாறு. சென்னை.

[4] தமிழண்ணல். (2009). தமிழ் இதழியல் வரலாறு. சென்னை.

[5] சாமிநாதன், வி. (2010). இதழியல் கலை. சென்னை.

[6] சிவத்தம்பி, கா. (1994). தமிழ் சமூகமும்பண்பாடும். சென்னை.

[7] நடராசன், த. (2012). திறனாய்வுக் கலை. சென்னை.

[8] இலக்குவனார், சி. (2008). தமிழ் இதழியல் ஆய்வுகள். சென்னை.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்